**<u>IN THE COURT OF THE ADDITIONAL ASSISTANT SUBORDINATE COURT, HOSUR</u>**

Date : 24.07.2025

SC. 202/2022

அ.சா 8 – செல்வம்

2025 ம் ஆண்டு ஜீலை மாதம் 24 ம் நாள் **செல்வம்** என்பவரின் சாட்சியாக விசாரரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டு 54 வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின் படி திரு கிருஷ்ணமூர்த்தி தலைமை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது .

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செல்வம் | தந்தை பெயர் | கோவிந்தன் |
| வயது | 28 | கிராமம் | ஆருப்பள்ளி |
| வட்டம் | சூளகிரி | மாவட்டம் | கிருஷ்ணகிரி |

**<u>முதல் விசாரணை : –</u>**

**( எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)**

நான் தற்போது ஆருப்பள்ளியில் வசித்து இளநீர் வியாபாரம்செய்து வருகிறேன். கடந்த 12.02.2020 ம் தேதி காலையில் சீனிவாசன் என்பவர் கழுத்தில் வெட்டுப்பட்டு ஒசூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சையில் இருந்த விவரம் தெரிந்து அங்கு சென்று பார்த்தேன். கார்த்திக் என்பவர் சீனிவாசனை வெட்டிவிட்டதாக சொன்னார்கள். 11.02.2020 ம் தேதி இரவு 8.00 மணியை போல் பெத்தன்னா வீட்டருகே கார்த்திக் சீனிவாசனை வெட்டி விட்டதாக சொன்னார்கள். எதனால், வெட்டினார் என்று எனக்கு தெரியாது. கார்த்திகின் அண்ணன் சின்னத்தம்பி என்பவர் இறந்து விட்டார் அதற்கு காரணம் நாங்கள் தான் என்று , நினைத்து கொண்டு எனது அண்ணன் சீனிவாசனை வெட்டிவிட்டார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள். எனது அண்ணன் சீனிவாசன் மேற்படி விவரங்களை தான் சொன்னார். எனது அண்ணனை மேல் சிகிச்சைக்காக ஒசூர் காவேரி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். முரளி என்பவர் எனது அண்ணன் சீனிவாசனை சிகிச்சைக்கு சேர்த்ததாக சொன்னார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நானும் எதிரியும் ஒரே ஊரைச் சார்ந்தவர்கள் , உறவினர்கள் இல்லை. போலிசார் விசாரணையின் போது சொல்லவில்லை. எனது அண்ணன் மனைவி பெயர் எனக்கு தெரியாது. எனது அண்ணன் சீனிவாசன் சூளகிரியில் குடியிருந்து வருகிறார். சம்பவ தேதியில் எதிரி குடும்பத்தார் சப்படியில் இருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. ஆனால் , எதிரியின் குடும்பத்தார்கள் சம்பவ தேதியில் எங்கள் ஊரில் தான் வசித்தார்கள். இந்த வழக்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எனது சகோதரர் கொடுத்த பொய்யாக புகாருக்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**(எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. )**

| |
|---|
| Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.<br><br>Additional Assistant Subordinate Judge,<br>Hosur |